# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1684/54 - 2010 දෙසැම්බර් 18 වැනි සෙනසුරාදා - 2010.12.18

*1684/54 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 1/2009.*

### 1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, நெற் சந்தைப்படுத்தற் சட்டம்

*மேற்படி சட்டத்தின் 10 ஆம் பிரிவுடனும் 4 ஆம் பிரிவின் (6) ஆம் பந்தியுடனும் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 62 ஆம் பிரிவின் கீழ் கூட்டுறவுகள் மற்றும் உள்நாட்டு வியாபாரத் துறை அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

ஜொன்ஸ்டன் பர்னாந்து,
கூட்டுறவுகள் மற்றும் உள்நாட்டு,
வியாபாரத்துறை அமைச்சர்.

கொழும்பு,
2010, நவெம்பர் 18.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நெற் சந்தைப்படுத்தும் சபை ஒழுங்குவிதிகளென எடுத்துக்காட்டப்படலாம்.

2. நெல், அரிசி என்பனவற்றை உமிநீக்கல், குற்றல் அல்லது பதனிடுதல் என்ற தொழிலைக்கொண்டு நடாத்துவதற்கான உரிமமொன்றுக்காகச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான விண்ணப்பம் ஒவ்வொன்றும், பொருளளவில் இதற்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ள “அ” என்னும் படிவத்திலிருத்தல் வேண்டும்.

3. நெல், அரிசி என்பனவற்றை உமிநீக்கல், குற்றல் அல்லது பதனிடுதல் என்ற தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு வழங்கப்படும் உரிமமொவ்வொன்றும் பொருளளவில் இதற்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ள “ஆ” என்னும் படிவத்திலிருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய உரிமமொவ்வொன்றும் அதன்கண் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கமையவிருத்தலும் வேண்டும்.

4. (அ) இந்த ஒழுங்குவிதியின் கீழான உரிமமொன்றுக்காகச் செலுத்தற்பாலதான கட்டணமானது, உமிநீக்கியின் அல்லது ஆலையின் ஆற்றலளவு ;

(i) மணித்தியாலமொன்றுக்கு ஒரு மெற்றிக் தொன்னை விஞ்சாதவிடத்து ஒவ்வோராண்டிற்கும் ஐந்நூறு ரூபா ;

(ii) மணித்தியாலமொன்றுக்கு ஒரு மெற்றிக் தொன்னை விஞ்சுமிடத்து ஆனால் மணித்தியாலமொன்றுக்கு ஐந்து மெற்றிக் தொன்னை விஞ்சாதவிடத்து, ஒவ்வோராண்டிற்கும் ஆயிரம் ரூபா ;

(iii) மணித்தியாலமொன்றுக்கு ஐந்து மெற்றிக் தொன்னை விஞ்சுமிடத்து ஆனால் மணித்தியாலமொன்றுக்கு பத்து மெற்றிக் தொன்னை விஞ்சாதவிடத்து, ஒவ்வோராண்டிற்கும் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா ;

(iv) மணித்தியாலமொன்றுக்கு பத்து மெற்றிக் தொன்னை விஞ்சுமிடத்து ஆனால் மணித்தியாலமொன்றுக்கு பதினைந்து மெற்றிக் தொன்னை விஞ்சாதவிடத்து, மணித்தியாலமொன்றுக்கு ஒவ்வோராண்டிற்கும் ஐயாயிரம் ரூபா ;

(v) மணித்தியாலமொன்றுக்கு பதினைந்து மெற்றிக் தொன்னை விஞ்சுமிடத்து ஆனால் மணித்தியாலமொன்றுக்கு இருபது மெற்றிக் தொன்னை விஞ்சாதவிடத்து, ஒவ்வோராண்டிற்கும் எண்ணாயிரம் ரூபா ; அத்துடன்

(vi) மணித்தியாலமொன்றுக்கு இருபது மெற்றிக் தொன்னை விஞ்சுமிடத்து ஒவவோராண்டிற்கும் பன்னிரண்டாயிரம் ரூபா ;

(ஆ) உரிமமொவ்வொன்றும், முன்னரே நீக்கப்பட்டாலொழிய, உரிமம் தொடங்குகின்ற திகதியிலிருந்து ஓராண்டுக்காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியானதாயிருத்தல் வேண்டும்.

(இ) உரிமமொன்றை மீளப்புதுப்பித்தலுக்கான விண்ணப்பமொவ்வொன்றும் பொருளளவில் இதற்கான அட்டவணையின் படிவம் அ என்பதிலிருத்தல் வேண்டும் என்பதுடன் நடப்பு உரிமம் முடிவுறுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் செய்யப்படுதலும் வேண்டும் ;

(ஈ) உரிமமொன்றுக்காக விதித்துரைக்கப்பட்ட கட்டணம் உரிமமொன்றுக்கான அல்லது அதன் புதுப்பித்தலுக்கான விண்ணப்பத்துடன் சேர்த்து சபைக்குச் செலுத்தப்பட்டிருந்தாலொழிய, உரிமமெதுவும் வழங்கப்படுதலாகாது ;

5. நெல் அரிசி என்பனவற்றை உமி நீக்கல், குற்றல் அல்லது பதனிடுதல் என்ற தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கான உரிமமொன்று வழங்கப்பெற்றுள்ள ஆள் ஒவ்வொருவரும் முன்னைய மாதம் தொடர்பில், ஒவ்வொரு மாதத்தினதும் பத்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் சபையினாற் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் விவரத்திரட்டொன்றைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

6. (அ) சட்டத்தின் 4 (6) (அ) என்னும் பிரிவின்கீழ் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கெனச் சபையினால் அதிகாரமளிக்கப்பெற்றுள்ள அதிகாரமளிக்கப்பட்ட கொள்வனவாளர் ஒவ்வொருவரும், முன்னைய மாதம் தொடர்பில், ஒவ்வொரு மாதத்திலும் பத்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர், சபையினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் விவரத்திட்டொன்றைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(ஆ) நெல், அரிசி என்பனவற்றை விற்பனை செய்தல், வழங்குதல், ஏற்றிச் செல்லல் அத்துடன் விநியோகித்தல் அல்லது உமி நீக்கல், குற்றல் அல்லது பதனிடுதல் என்ற தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு 4 (6) (ஆ) என்னும் பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்பெற்றுள்ள அதிகாரமளிக்கப்பட்ட கொள்வனவாளர் ஒவ்வொருவரும், முன்னைய மாதம் தொடர்பில், ஒவ்வொரு மாதத்தினதும் பத்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர், சபையினாற் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் விவரத்திரட்டொன்றைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

7. உரிமம் பெற்றவர் ஒவ்வொருவரும் ஏதேனும் உமிநீக்குமிடம், ஆலை, களஞ்சியம் அல்லது உரிமத்தில் குறிப்பிடப்பட்ட தொழில் கொண்டு நடாத்தப்படும் வேறு வளவுகளினுள் நுழைந்து சோதனையிடுவதற்கு அதற்கெனச் சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட சபையின் எவரேனுமலுவலரை (இதனகத்தின் மேல் "அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" எனக் குறிப்பிடப்படுவார்) எல்லா நியாயமான நேரங்களிலும் அனுமதித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய தொழில் தொடர்பான பதிவேடுகள், இடாப்புக்கள், கணக்குப் புத்தகங்கள், வேறு ஆவணங்கள் என்பனவற்றைப் பார்வையிடுவதற்கும் அவசியமாயின் தேவைப்படுத்தப்பட்டவாறு ஏதேனும் வடிவத்தின் பிரதிகளைப் பெறுவதற்கும் அவற்றிலிருந்து குறிப்புக்கள் எடுப்பதற்கும் அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரை அனுமதித்தலும் வேண்டும்.

8. அதிகாரமளிக்கப்பட்ட கொள்வனையாளர் ஒவ்வொருவரும் நெல், அரிசி என்பனவற்றை உமிநீக்கல், குற்றல் அல்லது பதனிடுதல் என்ற தொழில் கொண்டு நடாத்தப்படும் அல்லது விற்பனை, வழங்கல், இடம்பெயர்த்தல் அல்லது விநியோகம் என்பவற்றுக்காக ஏதேனும் நெல் அல்லது அரிசி களஞ்சியப்படுத்தப்படும் எவையேனும் வளவுகளினுள் நுழைந்து சோதனையிடுவதற்குச் சபையின் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரை எல்லா நியாயமான நேரங்களிலும் அனுமதித்தல் வேண்டுமென்பதுடன் தொழில் தொடர்பான பதிவேடுகள், இடாப்புக்கள், கணக்குப் புத்தகங்கள், வேறு ஆவணங்கள் என்பனவற்றைப் பார்வையிடுவதற்கும் அவசியமாயின் தேவைப்படுத்தப்பட்டவாறு ஏதேனும் வடிவத்தின் பிரதிகளைப் பெறுவதற்கும் அவற்றிலிருந்து குறிப்புக்கள் எடுப்பதற்கும் அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரை அனுமதித்தலும் வேண்டும்.

9. இவ்வொழுங்குவிதிகளில் "சட்டம்" என்பது, 1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க நெற் சந்தைப்படுத்தற் சபைச் சட்டமெனப் பொருள்படும்.

"சட்டம்" என்பது, 1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க நெற் சந்தைப்படுத்தற் சபைச் சட்டமெனப் பொருள்படும், அத்துடன்

"சபை" என்பது, 1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க நெற் சந்தைப்படுத்தற் சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட நெற் சந்தைப்படுத்தற் சபை எனப் பொருள்படும்.

10. 1972, சனவரி 14 ஆந் திகதி கொண்ட 14,992/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1971 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நெற் சந்தைப்படுத்துதல் சபை ஒழுங்குவிதிகள் இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.

*(ஒழுங்குவிதி 2 மற்றும் 4).*

*அட்டவணை*

**படிவம் "அ"**

விண்ணப்பப்படிவம்

*1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க நெற் சந்தைப்படுத்தற் சபைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் நெல்லையும், அரிசியையும் உமிநீக்கல், குற்றுதல், பதனிடுதல் ஆகிய தொழில்களைக் கொண்டு நடாத்துவதற்கான உரிமத்துக்கான விண்ணப்பம்.*

1. விண்ணப்பக்காரரின் விவரங்கள் :

(அ) முழுப்பெயர் (கீழேயுள்ள 1* ஆவது குறிப்பைப் பாரக்க) (தனித்தனி எழுத்துக்களில்) :-
முகவரி :----.

(ஆ) பிரசாவுரிமையின் தன்மை :

(i) (அ) வம்சாவழி மூலம் :----.

(ஆ) பதிவு மூலம் :----.

(ii) விண்ணப்பக்காரர் கீழே 1* ஆவது குறிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள எவையேனும் வகுதிக்குட்பட்டவராயின் ஒவ்வொரு பணிப்பாளரினதும், பங்காளரினதும் விண்ணப்பிக்கும் குழுமத்தில் எத்தன்மையதுமான சொத்தாண்மை அக்கறைகொண்ட ஒவ்வோர் ஆளினதும் பிரசாவுரிமையின் (ஊழியர் நீங்கலாக).

ஒரு இலங்கைப் பிரசை :-

(அ) பிறப்பு மூலம் :----.
(ஆ) பதிவு மூலம் :----.
(அத்தகைய ஒவ்வொரு ஆளினதும் முழுப்பெயரையும் முகவரியையும் பதிவு இலக்கத்தையும் தருக :----.
(இ) பந்தி (ஆ) (ii) இல் குறித்துரைக்கப்பட்டுள்ள வகுதிகளுக்குட்பட்ட எவரேனும் ஆள் இலங்கைப் பிரசையொருவராக அல்லாவிடில் அத்தகைய ஒவ்வொருவரினதும் பின்வரும் விவரங்களைத் தரவும் ;

(அ) முழுப்பெயர் :-

(ஆ) நாட்டினம் :-

(இ) நிரந்தர முகவரி :-

(ஈ) விண்ணப்பிக்கும் குழுமத்தில் கொண்டுள்ள அக்கறையின் தன்மை :---.

(ஈ) கூட்டிணைக்கப்பட்டிருப்பின் எவ்வாறு :-

(சட்டத்தின் எந்த ஏற்பாடுகளின்கீழ் விண்ணப்பகாரர் கூட்டிணைக்கப்பட்டுள்ளார் என்று தயவு செய்து கூறவும்)
.

(உ) கூட்டிணைப்புச் சான்றிதழ் இலக்கமும், கூட்டிணைப்புத் திகதியும் (கூட்டிணைப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

(ஊ) பிரதான தொழிலிடம் :----.

**குறிப்பு**.- * விண்ணப்பக்காரர் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாயின் தயவு செய்து அதன் முழுப்பெயரை எழுதுக. ஒரு பங்காண்மையின் அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்களின் குழுவொன்றின் விடயத்தில் அத்தகைய கூட்டிணைக்கப்படாத ஆட்களின் குழுவின் எத்தன்மையதுமான இயல்பினதான சொத்தாண்மை சார்ந்த அக்கறை கொண்டுள்ள ஒவ்வொரு பங்காளரினதும் ஒவ்வோர் ஆளினதும் முழுப்பெயர் தரப்படுதல் வேண்டும்.

அட்டவணை (தொடர்ச்சி)

(எ) தொழிலின் பெயர் :----.

(ஏ) வியாபாரப் பெயர்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவுச் செய்யப்பட்டதா :-

(அ) ஆம் :----.
(ஆ) இல்லை :----.

(i) வியாபாரப் பெயர்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழின் பதிவு இலக்கம் :-

1. :....................................................................

2. :....................................................................

2. பொறித்தொகுதிகளினதும் உபகரணங்களினதும் விவரங்கள் :-

(அ) உமிநீக்கியை அல்லது ஆலையை நிறுவிய திகதி :---
(ஆ) தொழில் ஏதாவது இருப்பின் அதைத் தொடங்கிய திகதி :-
(இ) ஏனைய விவரங்கள் (இதற்கான பின்னிணைப்பு "அ" வை நிரப்புக) :-

3. வேலையின் உள்ளாற்றலின் விவரங்களும் அதனோடு தொடர்புள்ள கருமங்களும்,

(அ) குற்றுதல் உமிநீக்கல், ஆகியவற்றின் தன்மை :-

(i) அரை அவியல் :----.
(ii) பச்சை :----.
(iii) இரண்டும் :---.

(ஆ) நாளொன்றுக்கு ஒரு முறை மாற்றுதலுக்கு மேலே இயங்கும் ஆற்றல் உண்டா?
அவ்வாறாயின் சாத்தியமுள்ள அளவு

(i) அரை அவியல் (கிலோ கிராம்) :----.
(ii) பச்சை (கிலோ கிராம்) :----.

(இ) (i) அரசாங்கத்திடமிருந்து ஒரு பங்கீடு பெறப்படுகின்றதா?

(ii) அவ்வாறாயின் அரசாங்கத்தினால் வழங்கப்படும் கிழமைக்குரிய பங்கீடு எவ்வளவென்று குறிப்பிடவும் :-

(ஈ) சனவரி 1இல் தொடங்கி திசெம்பர் 31 இல் உடன் முற்போந்த ஆண்டில் விண்ணப்பகாரர் உட்படத் தனிப்பட்ட திறத்தவர்களுக்கு உமிநீக்கல்/குற்றுதல் செய்யப்படும் நெல்.

4. காணியினதும் கட்டடங்களினதும் விவரங்கள் (உமி நீக்கி/ஆலை நிறுவப்பட்டுள்ளதா?)

(அ) காணியின் பெயர் :---.
அமைவிடம் :----.
(தயவு செய்து பட்டினத்தின்/கிராமத்தின் அத்துடன் மாவட்டத்தின் பெயரைத் தருக) காணியின் பரப்பளவு:-
காணியின் விஸ்தீரணம் :----.

(ஆ) காணி /வளவின் வரிமதிப்பு வீட்டு இலக்கம்/இலக்கங்கள் :-

(இ) பிரதான தொழிலிடம் :-

(ஈ) கட்டடங்களினதும் அமைப்புக்களினதும் விபரங்கள் :-
(இதற்கான பின்னிணைப்பு "ஆ" வை நிரப்புக).

**குறிப்பு**.- விண்ணப்பக்காரர் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாயின் அதன் முழுப்பெயரை எழுதவும். ஒரு பங்காண்மையின் அல்லது ஆட்களின் குழுவொன்றின் விடயத்தில் கூட்டிணைக்கப்படாத ஆட்களின் குழு குறிப்பிடப்படுதல் வேண்டும்.

5. வீதங்கள் பற்றிய விபரங்கள் :

(i) வரிகள்/வீதவரிகள் (ஏதாவது இருப்பின்) செலுத்தப்படும் உள்ளூர் அதிகார சபையின் பெயர் :----.
(ii) ஒரு காலாண்டுக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை :----.
(iii) ஆண்டுக்குரிய வரிமதிப்பீடு :----.
(iv) தொழில் (ஏதாவது இருப்பின்) அதை நடத்தும் போது உள்ளூர் அதிகார சபைக்கு உரிமக் கட்டணமாக/பதிவுக் கட்டணமாக செலுத்தப்படும் தொகை :----.
(v) தற்போதுள்ள உரிமம் (ஏதாவது இருப்பின்) முடிவுறும் திகதி :----.

6. விபரங்கள் - நாளாவிதம் :-

(அ) தீயால் வரும் ஆபத்து - தீயணைப்புக்காக முற்காப்புகள் செய்யப்பட்டுள்ளனவா? அவ்வாறாயின் விவரங்கள் தருக :-

(ஆ) காப்புறுதி - தீ விபத்துக்கு அல்லது எவையேனும் ஆபத்துக்களுக்கெதிராக காப்புறுதி செய்யப்பட்டுள்ளதா? அவ்வாறாயின் விவரங்கள் தருக :-

........................................... ஆகிய நான்/நாம் எனது/எமது அறிவுக்கெட்டியவரை மேலே சொல்லப்பட்ட விபரங்களைனைத்தும் உண்மையானவையும், சரியானவையுமாகும் எனஉறுதிக்கூறுகிறேன்/ உறுதிக்கூறுகிறோம். மேலே சொல்லப்பட்ட விபரங்கள் ஏதும் பிழையானவையெனக் கண்டால் நெல் சந்தைப்படுத்தற் சபை எனக்கு/எமக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமத்தை இல்லாதொழிக்கும் தத்துவத்தையுடையது என்று நான்/நாம் அறிந்திருக்கிறேன்./அறிதிருக்கிறோம்.

..........................................................
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :..........................
இப்படிவத்தை நிரப்பும் போது பொருந்தாததைக் கீறிவிடுக.

**பின்னிணைப்பு "அ"**

பொறித் தொகுதியும் உபகரணங்களும்

| விவரணம் | கூறுகளின் எண்ணிக்கை, அளவு, ஏற்புடைத்தாகுமிடத்து கொள்ளளவு | விவரக் கூற்றுகள், தயாரிப்பு வகை முதலியன | வயது | குறிப்புகள் |
|---|---|---|---|---|
| (1) அரை அவியல் உபகரணம் : | | | | |
| (அ) குளிர்ந்த ஊறவைக்கும் தாங்கிகள் | | | | |
| (ஆ) சூடாக ஊறவைக்கும் அரை அவியல் தாங்கிகள் | | | | |
| (இ) நீராவிக் கொதிகலன்கள் | | | | |
| (ஈ) உலர்த்தும் தரைகள் முழுப் பரப்பளவு | | | | |
| (உ) நீர் சேகரிக்கும் தாங்கிகள் | | | | |
| (ஊ) நீர் வழங்கல் மூலம் | | | | |
| (எ) செயற்கை உலர்த்திகள் | | | | |
| (ஏ) பிற அரை அவியல் உபகரணம் | | | | |
| (ஐ) (அ) தொடக்கம் (எ) வரைக்கும் அடங்காத வேறு எவையேனும் உபகரணங்கள் | | | | |

**பின்னிணைப்பு "அ"**(தொடர்ச்சி)

பொறித் தொகுதியும் உபகரணங்களும்

| விவரணம் | கூறுகளின் எண்ணிக்கை, அளவு, ஏற்புடைத்தாகுமிடத்து கொள்ளளவு | விவரக் கூற்றுகள், தயாரிப்பு வகை முதலியன | வயது | குறிப்புகள் |
|---|---|---|---|---|
| (2) நெல் குற்று உபகரணம் : | | | | |
| (அ) நெல் சுத்தமாக்கும் பொறிகள் | | | | |
| (ஆ) உமி நீக்கும் பொறிகள் | | | | |
| (இ) பிரித்தெடுக்கும் பொறிகள் | | | | |
| (ஈ) தீட்டும் பொறிகள் | | | | |
| (உ) அரிசியைத் தரப்படுத்தும், உலர்த்தும், கடத்தும் பிற பொறிகள் | | | | |
| (3) மின்சார நிறுவுகைகள் | | | | |
| (4) முதன்மை இயக்கக் கருவிகளும் அவற்றின் குதிரை வலுவின் விவரம் முதலியனவும். | | | | |
| (5) கழிவு நீர் அகற்றும் வசதிகள் | | | | |
| (6) இப்பின்னிணைப்பின் (1), (2), (3), (4), (5) என்பவற்றில் அடங்காத வேறு ஏதேனும் பொறி அல்லது உபகரணம் | | | | |

**பின்னிணைப்பு "ஆ"**

கட்டிடங்களும் கட்டுமாணங்களும்

| விவரணம் | பொருத்தமானபடி பரப்பளவு அல்லது அளவு | விவரக் கூற்றுகளும், நிர்மாணமும் அமைப்பும் | ஏற்புடைத்தான விடத்து கொள் ளளவு மெற்றிக் தொன்னில் | வயது | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| (1) நெல்லைச் சேமித்து வைப்பதற்கு | | | | | |
| (2) அரிசியைச் சேமித்து வைப்பதற்கு | | | | | |
| (3) குற்றுதலுக்கு | | | | | |
| (4) பிற பயன்பாட்டிற்கு, உதாரணமாக அலுவலகங்கள் முதலியன | | | | | |

**படிவம் "ஆ"**

1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, நெற் சந்தைப்படுத்தல் சபைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமம்

1. உரிமம் பெற்றவரின் பெயர் :----.
2. உரிமம் பெற்றவரின் முகவரி :----.
3. தொழிலின் பெயரும் பிரதான தொழிலிடமும் :----.
4. உமி நீக்கும் பொறியின்/குற்றும் ஆலையின் கொள்ளளவு :-
5. உரிமம் செல்லுபடியாகும் காலம்

   (அ) தொடங்கும் திகதி :

   (ஆ) முடிவடையும் திகதி :----.

உரிமம்பெற்றவரால் செய்யப்பட்ட...................... திகதியிடப்பட்ட விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்த பின்பு மேலே பெயர் குறிக்கப்பட்ட உரிமம் பெற்றவருக்கு நெல், அரிசி போன்றவற்றை உமி நீக்கல், குற்றுதல், பதனிடுதல் போன்ற தொழிலை மேலே குறிப்பிடப்பட்ட இடத்தில் நடாத்துவதற்கு இந்த உரிமம் நெற் சந்தைப்படுத்தற் சபையினால் வழங்கப்பட்டுள்ளது. இதன்கண் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைய இவ்வுரிமம் வழங்கப்படுகின்றது.

நெற் சந்தைப்படுத்தற் சபையின் அதிகாரத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

உரிமமளிக்கும் அலுவலர்.

நெற் சந்தைப்படுத்தற் சபை,
இல. 330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு - 02.

திகதி..............

**மேலே குறிப்பீடு செய்யப்பட்ட நிபந்தனைகள்**

1. இந்த உரிமம், உரிமம் பெற்றவரின் பிரதான தொழிலிடத்தில் துலாம்பரமான ஓர் இடத்தில் வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டும்.

2. உரிமம் பெற்றவர் நெல் குற்றும் முறை தொடர்பிலான அறிவுறுத்தல்கள், அதன் இடைநேர்விளைவான கருமங்கள் அவரது உமி நீக்கியின் அல்லது ஆலையின் ஏதேனும் பாகத்தை அல்லது பாகங்களை மாற்றீடு செய்தல், பழுதுபார்த்தல் உட்பட ஏனையவற்றுடன் நெல், அரிசி போன்றவற்றை உமி நீக்கும், குற்றும் அல்லது பதனிடும் அவருடைய தொழிலை நடாத்துவது சம்பந்தமாக சபையின் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் காலத்திற்குக்காலம் வழங்கப்படும் அறிவுறுத்துரைகள் எல்லாவற்றையும் தாமதிக்காது செயற்படுத்த வேண்டும்.

3. உரிமம் பெற்றவர் அவருடைய தொழில் தொடர்பாகச் சரியான பதிவேடுகள், இடாப்புகள், கணக்குப் புத்தகங்கள் போன்றவற்றைப் பேணுதல் வேண்டும். சபையின் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் நியாயமான நேரத்தில் சோதனை செய்வதற்கு அவைகளைக் கிடைக்கக்கூடியதாகச் செய்ய வேண்டும். குறிப்புகளை அல்லது அவைகளிலிருந்து குறிப்பெடுப்பதற்கு அவர்களை அனுமதிக்க வேண்டும். அத்துடன் அவர் அவ்வாறு வேண்டினால் அவைகளை ஒப்படைக்க வேண்டும்.

4. மூன்றாம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பதிவேடுகள், இடாப்புகள், கணக்குப் புத்தகங்கள் போன்றவற்றிற்கு மேலதிகமாக சபையின் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படக்கூடிய அத்தகைய வேறு பதிவேடுகள், இடாப்புக்கள், கணக்குப் புத்தகங்கள் போன்றவற்றையும் பேணுதல் வேண்டும். சபையின் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினாலும் நியாயமான நேரத்தில் சோதனை செய்வதற்கு அத்தகைய இன்னும் வேறு பதிவேடுகள், இடாப்புக்கள், கணக்குப்புத்தகங்கள் போன்றவற்றைக் கிடைக்கக்கூடியதாகச் செய்ய வேண்டும். அத்துடன் அவசியப்படின் தேவைப்படுத்தப்பட்டவாறு ஏதேனும் வகையில் அவற்றிலிருந்து குறிப்புகளை அல்லது அவற்றின் பிரதிகளைப் பெறுவதற்கும் அனுமதித்தல் வேண்டும். அத்துடன் அவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்படின் அவைகளை ஒப்படைத்தலும் வேண்டும்.

5. உரிமம் பெற்றவர் நெல், அரிசி போன்றவற்றை உமிநீக்குதல், குற்றுதல் அல்லது பதனிடுதல் போன்றவற்றைச் செய்யும் தொழில் முயற்சிப்பொருட்டு வழங்கப்பட்ட உரிமத்தையுடையவர் மேற்கூறப்பட்ட உமிநீக்குதல் குற்றுதல் அல்லது பதனிடுதல் தொடர்பில் விவரத் திரட்டுகளையும் புள்ளி விவரங்களையும் சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் காலத்திற்குக்காலம் விதிக்கப்படக்கூடிய கால இடைவெளிகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.

6. உரிமம் பெற்றவர் ஏதாவது களஞ்சியங்கள், கிடங்குகள், அலுவலகம் அல்லது அவருடைய தொழில் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் வேறு ஏதாவது கட்டடம் உட்பட அவருடைய உமிநீக்கி ஆலை நிறுவப்பட்டிருக்கும் வளவுகளில் சபையின் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரை நியாயமான நேரத்தில் நுழைந்து அவற்றை அல்லது அதன் ஏதாவது பகுதியைச் சோதனை செய்ய அனுமதிக்க வேண்டும். அவைகள் சம்பந்தமான ஏதாவது புத்தகங்கள், ஆவணங்கள் போன்றவற்றையும் அல்லது அவைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது ஏதாவது சம்பந்தமாக அல்லது வளவுகளில் இருக்கக்கூடிய ஏதாவது நெல் அல்லது அரிசி சம்பந்தமாக ஏதாவது தகவலையளிக்க வேண்டும். அல்லது அவருடைய தொழில் நடாத்தும் இடத்தில் இருக்கக்கூடிய ஏதாவது நெல்லையும் அல்லது அரிசியையும் அவருக்கு ஒப்படைத்தல் வேண்டும். அல்லது அவருடைய சோதனைக்குக் கிடைக்கக்கூடியதாகச் செய்தல் வேண்டும்.

7. உரிமம் பெற்றவர் அவருடைய தொழிலை நடாத்துவது சம்பந்தமாகச் சபையினால் வேண்டப்படக்கூடிய ஏதாவது தகவலைச் சபைக்கு அளிக்க வேண்டும்.

8. மேலே குறிப்பிடப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் அவரால் அளித்திருக்கப்படக்கூடிய விவரங்களில் ஏதாவது ஒன்று அல்லது அதற்குக் கூடியது அல்லது அத்தகைய விவரங்களில் ஒன்றின் அல்லது அதற்கு மேற்பட்டதில் ஏதாவது பகுதி தொடர்பாகத் தேவைப்படக்கூடிய ஏதாவது மாற்றங்களைச் சபைக்கு எழுத்தில் உரிமம் பெற்றவர் தாமதமின்றி அறிவித்தல் வேண்டும்.

9. இந்த உரிமம், உரிமம் பெற்றவருக்குச் சொந்தமானதாதல் வேண்டும். மேற்கொள்ள வேண்டிய தொழிலைச் செய்வதற்கு வழங்கப்பட்ட உரிமம் தொடர்பான தொழில் சபையின் எழுத்திலான அனுமதியின்றி மாற்றப்படுதலோ, தடைசெய்யப்படுதலோ அல்லது ஏதாவது வேறு முறையில் கையாளப்படுதலோ ஆகாது.

10. உமி நீக்குதல், குற்றுதல் அல்லது பதனிடுதல் போன்ற நோக்கங்களுக்கு எவராலும் காலத்திற்குக் காலம் உரிமம் பெற்றவருக்கு வழங்கப்பட்ட நெல் முழுவதும் அல்லது அவற்றிலிருந்து பதனிடப்பட்ட அரிசி முழுவதும் அந்த ஆளுக்கு ஒப்படைக்கப்படும்வரை உரிமம்பெற்றவரின் தொழிலின் நோக்கத்திற்குத் தாபிக்கப்பட்ட களஞ்சியங்களிலும் கிடங்குகளிலும் மட்டும் வைத்திருக்கப்படல் வேண்டும்.

11. உரிமம் பெற்றவருக்குச் சபையினால் நெல் வழங்கப்படுமெனச் சபை உத்தரவாதம் ஒன்றையும் அளிக்கமாட்டாது.

12. உரிமம்பெற்றவர் தமக்குச் சொந்தமான நெல்லை உமிநீக்க, குற்ற அல்லது பதனிட விரும்புமிடத்து, அவரது மேற்படி தொழிலிடத்தில் அதனை உமிநீக்குவதற்கு, குற்றுவதற்கு அல்லது பதனிடுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும். பதிவேடுகள், இடாப்புகள், கணக்குப் புத்தகங்கள் போன்றவற்றில் அது சம்பந்தமான சரியான பதிவுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

12- 1165

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.